பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 11 2025 12 40

சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பங்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

3. வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சியில் உறுதியுடன் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஜம்மு கஷ்மீர் காவல் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை கையாளும் போது எதிர்பாராத விதமாக நேரிட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

5. Deaflympic போட்டிகள், ஜப்பானின் டோக்கியோவில் இன்று தொடங்குகின்றன

--- இனி விரிவான செய்திகள் -----

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பிறந்த தினம் பழங்குடியினர் பெருமை தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியினத் தலைவர் பிர்ஸா முண்டாவின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், பிர்ஸா முண்டாவின் வாழ்க்கை இன்றளவும் அனைவருக்கும் உந்து சக்தியாக உள்ளது என்று கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், பழங்குடியின தலைவராகவும், சுதந்திர போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் போற்றப்படும் பிர்ஸா முண்டா, பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பழங்குடியினரின் மேம்பாட்டில் தனிக்கவனம் செலுத்தி வருவதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

>><><><><><<

உலகளவில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றார்.

உலகளாவிய சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை வகிக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் விருப்பமாகும் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச வர்த்தக அமைப்பில் இந்தியா தலைமைப் பண்புடன் செயலாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளரும் நாடுகளின் குரலாக இந்தியா செயல்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>><><><><><<

வடகிழக்கு மாநிலங்களின் சுற்றுலா வளர்ச்சியில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

கேங்க்டாக்கில் நடைபெற்ற சர்வதேச சுற்றுலா கண்காட்சியில் காணொலி வாயிலாக உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அருணாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு பெமாகண்டு, வடகிழக்கு மாநிலங்கள் சுற்றுலாத்துறையில் பெரும் வளர்ச்சிக் கண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

>><><><><<

பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றதை அடுத்து, அதில் இடம்பெற்ற தலைவர்கள் இன்று பாட்னாவில் முதலமைச்சர் திரு நிதிஷ்குமாரை சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய லோக் ஜன்சக்தித் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு சிராக் பாஸ்வான், தேர்தல் வெற்றிக்காக திரு நிதிஷ்குமாருக்கு வாழ்த்துத் தெரிவித்ததாக கூறினார்.

கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பங்களிப்பே இந்த வெற்றிக்கு காரணம் என்று திரு நிதிஷ் குமார் கூறியதாக அவர் தெரிவித்தார்.

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 202 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

>><><><><<

பீகார் தேர்தல் வெற்றி தமிழகம், மேற்கு வங்கம் உள்ளிட்ட இதர மாநிலங்களிலும் தொடரும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளது சரியான கருத்து என்று மத்திய அமைச்சர் திரு ஜிதன்ராம் மாஞ்சி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், பீகார் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்படுத்திய திட்டங்களை சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக தொழில்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் பீகாரைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக இதர மாநிலங்களுக்கு செல்வதை தடுக்க இயலும் என்றும் திரு ஜிதன்ராம் மாஞ்சி தெரிவித்தார்.

>><><><><<

பீகார் சட்டப்பேரவை தேர்தல் தோல்விக்கான காரணம் குறித்து காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இன்று கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி உட்பட மூத்த நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

இந்த தேர்தல் தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு கே சி வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தல் முடிவுகளை நம்ப முடியவில்லை என்றார்.

>><><><><<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் தங்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக ஜன் சுராஜ் கட்சியின் தலைவர் திரு உதய் சிங் கூறியுள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்காளர்களை ஈர்க்க தங்கள் கட்சி தவறிவிட்டதாக கூறினார்.

>><><><><<

ஜார்க்கண்ட் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் மற்றும் தலைவர்கள் பலர் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

>><><><><<

ஜம்மு கஷ்மீர் காவல் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை கையாளும் போது எதிர்பாராத விதமாக நேரிட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த உள்துறை செயலகத்தின் இணை செயலர் திரு Prashant Lokhande, இந்த விபத்தில்

காவல்துறையைச்சேர்ந்த 27 பேரும், வருவாய் துறை அதிகாரிகள் இரண்டு பேரும், பொதுமக்கள் 3 பேரும் காயமடைந்ததாக தெரிவித்தார்.

உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக கூறிய இணை செயலர், அவர்கள் குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றார்.

ஜம்மு கஷ்மீர் காவல்துறை தலைவர் திரு Nalin Prabhat, இந்த சம்பவம் விபத்துதான் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வெடிபொருட்களை அதிகாரிகள் ஆய்வு செய்தபோது இந்த விபத்து நேரிட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஜம்மு கஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>><><><><><<

அருணாச்சலப்பிரதேசத்தில் தடைசெய்யப்பட்ட உல்ஃபா அமைப்பைச் சேர்ந்த ஒருவர் பாதுகாப்புப் படையினர் முன் சரணடைந்தார்.

Tirap மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது அவர் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

ஐநா பாதுகாப்புக் குழு சார்ந்த அமைப்புகள் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐநா பாதுகாப்புக் குழு விவாதத்தில் உரையாற்றிய இந்தியாவுக்கான நிரந்தர பிரதிநிதி திரு Parvathaneni Harish, சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதன் பொறுப்பு இந்த அமைப்புக்கு உள்ளதாக கூறினார்.

>><><><><><<

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது என இந்தியாவும், பராகுவேயும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளுக்கு இடையேயான இணை ஆணையத்தின் முதலாவது கூட்டம் Asuncion-ல் இன்று நடைபெற்றது.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு, தீவிரவாதம் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

>><><><><<

ஆப்கானிஸ்தானுடனான பேச்சுக்களில் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து மூன்று சுற்று பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு Tahir Andrabi கூறியுள்ளார்.

>><><><><<

தில்லியில் சாலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு 18 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்குமாறு வாகன விபத்து தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு லாரி ஒன்று இருசக்கர வாகனத்தில் மோதியதில் நேரிட்ட உயிரிழப்பு தொடர்பாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

Deaflympic போட்டிகள், ஜப்பானின் டோக்கியோவில் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் ஆடவர் பிரிவில் 45 பேரும், மகளிர் பிரிவில் 28 பேரும் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

-------------

ஸாம்பியா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Rajesh Srikar காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-5, 21-6 என்ற செட்கணக்கில் ஸாம்பியாவின் Maurice Mbewe-யை வென்றார்.

Venkata Sai Harshit Thumla, Adityan, Hemant Gowda, Pravararchith Rudrakshala Matam ஆகியோர் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், Anvita Vijay மகளிர் ஒற்றையர் பிரிவிலும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா சற்றுமுன்வரை முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்துள்ளது.

தென்னாப்பிரிக்கா அணி முதல் இன்னிங்ஸில் 159 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>> End of News <<